**BESE-046**

00764

# இளநிலை கல்வியியல்
# பருவத்தேர்வு (B.Ed.)
## Term-End Examination
## December, 2017

## BESE-046 : தமிழ் கற்பித்தல்
## (TEACHING OF TAMIL)

*Time : 3 hours* *Maximum Weightage : 70%*

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ii) அனைத்து வினாக்களுக்கும் மதிப்பெண்கள் சமம்.

---

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். 15

சங்க காலக்கல்விமுறை பற்றிய உமது மதிப்பீடு யாது ?

அல்லது

கற்பித்தலில் வினாக்கள் பெறும் இடம் யாது ? வினாக்களை ஒரு திறமையான ஆசிரியர் எங்ஙனம் கையாளுவார் ?

2. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு **மிகாமல்** விடை தருக. நடிப்பு முறை என்றால் என்ன ? இதன் வகைகளைக் கூறுக. நடிப்பு முறையைக் கையாள வேண்டிய குறிப்புகள் யாவை ? இதன் நன்மை தீமைகளை எடுத்துரைக்கவும். 15

**அல்லது**

திருத்தமான, திருத்தமில்லா பேச்சின் இயல்புகளைக் கூறுக. திருத்தமில்லா பேச்சின் குறைகளை நீக்கும் வழிகள் யாவை ?

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களில் எவையேனும் 4 வினாக்களுக்கு 150 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். 4x5=20

(a) வாய்மொழிப் பயிற்சியின் வழி மொழிப் பாடம் கற்பிபதற்கான முறைகள் யாவை ?

(b) படித்தலை விளக்கி மாணவர்கள் விரைவாகப் படிப்பதற்குத் தடையாக உள்ளவற்றை விளக்குக.

(c) இணைத்துக் கற்பித்தலைக் கூறி, இலக்கணப் பாடத்தை இம்முறையில் எவ்வாறு கற்பிப்பீர் ?

(d) செய்யுள் கற்பித்தலில் உள்ள நான்கு (4) முறைகளை விளக்குக.

(e) பாடக்குறிப்பு என்றால் என்ன ? பாடக் குறிப்பின் இன்றியமையாமையைக் கூறுக.

(f) பாடப்புத்தகத்தினை எவ்வாறு ஒரு மொழி-யாசிரியர் முழுமையாக பயன்படுத்தலாம் என்பதனை விளக்குக.

(g) கேட்கும் திறன் என்றால் என்ன ? கற்றலில் கேட்கும் திறனின் பங்கு யாது ?

(h) நல்ல தேர்வின் இன்றியமையாப் பண்பு-களைக் கூறுக.

**4.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு **600** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **20**

நல்ல கையெழுத்தின் நல்லியல்புகளை நவில்க. மொழியாசிரியராகிய நீவிர் நல்ல கையெ-ழுத்தை மாணவர்களிடையே கைவரப் பெற, நீவிர் வழங்கிய பயிற்சிகளை உம் வகுப்பறை துணை கொண்டு விளக்குக.